Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-3
பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு)

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0
வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 19 } ஈரோடு 6-7-1946 ஆனிமீ 22உ { மலர் 39

# தொழிலாளர் இயக்கந்தான் திராவிடர் கழகம்

(சென்னை பக்கிங்காம் கர்னாட்டிக் மில் தொழிலாளர் ஸ்ட்ரைக்கு சம்பந்தமாகச் சென்னை நகர திராவிட கழகச் சார்பாய் 30-6-46 மாலை திருவல்லிக்கேணிக் கடற்கரையில் தோழர் C. D. T. அவர்கள் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் பெரியார் ஈ.வெ.ரா. அவர்களாற்றிய சொற்பொழிவானது இன்றைய தொழிலாளர் பிரச்சினையை நன்கு விளக்குவதாயிருப்பதால் அதனையே தலையங்கமாக வெளியிடுகின்றோம்)

தோழர்களே!

இக்கூட்டம் தொழிலாளர்களின் தற்காலப் பிரச்னையாகிய ப.க.மில் ஸ்ட்ரைக்கு சம்பந்தமாக திராவிடர் கழகத்தாரால் கூட்டப்பட்டகூட்டம். தொழிலாளர்களுக்கும் திராவிட கழகத்தாருக்கும் அதிக ஒற்றுமை இல்லை. "திராவிட கழகத்தார் தொழிலாளிகளை சரிவர கவனிப்பதில்லை" என்பது ஒரு புகார். இது தொழிலாளர்களின் தெரியாத்தனமேயாகும். தொழிலாளிகளுக்கும் தொழிலாளரியக்கங்களுக்கும் பெருவாரியாய் காங்கரஸ், கம்யூனிஸ்ட், புராணப் பிரசங்கிஸ்ட் ஆகிய ஸ்தாபனங்கள்தான் அதிக சம்பந்தம் வைத்துக்கொண்டு அவைகளை ஆதரித்து வருகிறார்களே தவிர திராவிட கழகத்தினிடம் தொழிலாளர்களுக்குப் பற்றில்லை. இது எனது 20, 25 வருஷம் அனுபவம். என்றாலும் நான் தொழிலாளர்கள் நம்மை ஆதரிக்கவில்லையே என்று ஒரு காலத்திலும் கவலைப்பட்டதில்லை அதற்காக அவர்களைப் பிடிக்க நான் வலை வைத்ததுமில்லை. பைபிளில் உள்ள ஒரு வாக்கியம்போல் அதாவது ஏசுகிருஸ்து அவர்கள் தேவனை நோக்கி, "தேவனே! அவர்கள் தாங்கள் செய்வது இன்னது என்று தெரியாமல் நடந்து கொள்ளுகிறார்கள்; அவர்களை மன்னித்தருள வேண்டும்" என்று சொன்னதாகச் சொல்வதுபோல் நம்நாட்டுத் தொழிலாளிகள் தாங்கள் செய்வதின் பயனை உணராமல் தங்கள் நிலைமையையும் உணராமல் வஞ்சகர்கள் கையில்சிக்கி, தலையெடுக்க முடியாமல் தாழ்ந்து கிடக்கிறார்கள் என்றாலும், அவர்கள் சம்மதமும் தகவலும் இல்லாமலே நாம் செய்வதைச் செய்வோம் என்று நாங்கள் அவர்களுக்காகவே தொண்டாற்றி வருகிறோம். எங்கள் தொண்டு யாவும் தொழிலாளர்களுக்காகவேதான். நாங்களும் தொழிலாளிகள்தான். ஆகவே வாய்ப்பினால் மாத்திரம் தொழிலாளிகளல்லாமல் பிறவியினால், சட்டத்தினால், சாஸ்திரங்களால், கடவுள்களால், கடவுள் சிருஷ்டியினால் நாங்கள் தொழிலாளிகளாக ஆக்கப்பட்டவர்கள். அப்படிப்பட்ட தொழிலாளிகள்தான் திராவிடர்கள். இப்போது தொழிலாளர் இயக்கத்தைச் சேர்ந்த தொழிலாளிகள் உண்மைத் தொழிலாளிகளில் 1000-ல் ஒரு பாகமாகத்தான் இருப்பார்கள்.

## நாங்களும் தொழிலாளர்களே

தொழிலாளி என்கின்ற பதத்துக்கு அர்த்தம் என்ன? வேலை செய்கிறவன் என்று அருத்தமாகும். "யாவருந்தான் வேலை செய்கிறார்கள். அப்படி இருக்க ஒரு கூட்டத்திற்கு மாத்திரம் தொழிலாளி என்று பெயர் கொடுக்கப்பட்டிருப்பானேன்" என்றால் பிறருக்கு ஆக தொண்டுசெய்து மனுதர்ம சாஸ்திரப்படி, தொழிலாளியாகவே வாழ்பவர்கள், தொழிலாளி என்று அழைக்கப்படுகிறார்கள். அந்தக் கருத்தில் பார்த்தால் திராவிடர்களாகிய

நாம் யாவரும் தொழிலாளிகள்கள் அல்லவா என்று கேட்கிறேன். இயந்திரங்களின் முன்னால் நிற்பவர்கள் மாத்திரம் தானா தொழிலாளர்கள்? வண்டி ஓட்டுகிறவர்கள், வண்டி இழுக்கிறவர்கள், வீதி கூட்டுகிறவன், கக்கூசுக்காரன், வண்ணார், நாவிதர், குயவன், உழுபவன், விதைப்பவன், தச்சன், கொல்லன், சக்கிலி, பறையன், செக்கு ஓட்டுகிறவன், நெசவு நெய்பவன் முதலிய சரீரத்தால் உழைத்து, வயிற்றுக்கு, வாழ்வுக்கு மாத்திரம் சம்பாதித்து அன்றாட வாழ்க்கைக்கு அன்றாடம் வரும்படி எதிர்பார்த்து நிற்கும் யாவரும் தொழிலாளி அல்லவா என்று கேட்கிறேன்.

இன்று இந்தமாதிரி தொழிலாளிகள் யார்? பிராமணர்களா? க்ஷத்திரியர்களா? அல்லவே! சூத்திரர்கள்தானே இந்தமாதிரியான தொழிலாளிகளாய் இருக்கிறார்கள்? அந்தச் சூத்திரர்கள் யார்? திராவிடர்களாகிய நாம்தானே 'சூத்திரர்' என்கின்ற பட்டியலில் சட்டப்படியும், சாஸ்திரப்படியும், கடவுள் சிருஷ்டிப்படியும், காரியத்தில் நடப்புப்படியும் இருந்து வருகிறோம்! இதை எந்தத் தொழிலாளியாவது மறுக்க முடியுமா? நான் மேலே சொன்ன தொழில்களில் ஒரு 'பிராமணன்' இருக்கிறானா? ஆகவே சரீரத்தினால் பாடுபடும் வேலை அவ்வளவும் சூத்திரர்கள் என்று அழைக்கப்படும், ஆக்கப்பட்டிருக்கும் திராவிடர்களாகிய நம் கையிலேயே இருப்பதால் திராவிடரியக்கம் தொழிலாளிகள் இயக்கம் என்று சொல்லுகிறேன்.

எதற்காக திராவிடர் இயக்கம் வேலைசெய்கிறது என்றால் திராவிடர் 4வது ஜாதியாக இருக்கக்கூடாது; தொழிலாளர் ஜாதியாக இருக்கக்கூடாது என்பதற்கு ஆகவேயாகும்.

## 'சூத்திரர்' சங்கமேதான்

தொழிலாளர் இயக்கம் திராவிடர் இயக்கம் என்பதற்கு பதிலாக மற்றவர்கள் இயக்கத்திற்கு இருப்பதுபோன்ற ஒரு பெயர் இருக்கவேண்டுமானால் நாம் என்ன பெயர் வைத்துக் கொண்டு இருக்கவேண்டும்? உங்களுக்குத் தெரியுமா? பிராமணர் தங்கள் இயக்கத்திற்கு பிராமணர் சங்கம் என்றும், வைசியர் தங்கள் சங்கத்திற்கு வைசியர் சங்கமென்றும், க்ஷத்திரியர் தங்கள் சங்கத்திற்கு க்ஷத்திரியர் சங்கமென்றும் பெயர் வைத்துக்கொண்டிருக்கிறார்களல்லவா? அந்தப்படி பார்த்தால் நாம் நம் சங்கத்திற்கு 'சூத்திரர்' சங்கம் என்று பெயர் வைத்துக்கொண்டிருக்க வேண்டும். ஆனால் சூத்திரன் என்பதை இப்போது நாம் இழிவாகக் கருதுகிறபடியால் சூத்ரனின் மாறுபேர்கொண்ட அதே கருத்துகொண்ட வேலையாள், தொழிலாளி சங்கம் என்று வைத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் அந்தப்பெயரை, தொழிலாளி என்பதை ஒரு சிறு கூட்டத்தார் பிரித்துவைத்துக் கொண்டதால் தொழில் செய்யும் ஜாதியாரர்கிய நாலாவது வர்ணத்தார்களாக்கப்பட்ட நாம் நம்முடைய இனத்தின் பேரால் திராவிடர் கழகம் என்பது வேண்டாம் என்றால் மற்றப்படி அதற்கு சரியானபெயர் சூத்திரர் சங்கம் என்பதேயாகும்.

ஆகவே திராவிடர் கழகம் என்பது 4வது வருணத்தாராக ஆக்கப்பட்டு, சமுதாயத்தில் இழிவுபடுத்தி, சரீரப் பாடுபட வேண்டியதாகக் கட்டாயப்படுத்தித்தாழ்த்தி வைத்திருக்கும் ஒரு 4 கோடி மக்கள்கொண்ட சமுதாயத்தின் விடுதலைக்கழகம் என்றுதான் சொல்ல வேண்டும். இப்படிப்பட்ட விடுதலைக்கழகத்தைத் தொழிலாள மக்கள் உணர்ந்துகொள்ளாமல் திராவிடர்களின் எதிரிகளின் ஆதிக்கத்திற்காக ஏற்பட்டிருக்கும் காங்கரசிலும், திராவிட எதிரிகள் தலைமைவகித்து நடத்தும் கம்யூனிஸ்ட் கட்சியிலும் சார்ந்திருப்பதோடு திராவிடர்களின் எதிரிகளுக்கு அடிமைகளாகவும், ஒற்றர்களாகவும் இருக்கும் புராணப் பிரசங்க புராண வாழ்வுக்காரர்களுக்குச் சிஷ்யர்களாகவும் இருப்பது எவ்வளவு அறியாமை, மானக்கேடு என்று பாருங்கள். பிராமணர் இயக்கமாகிய காங்கரஸ் நாளுக்குநாள் வெற்றிபெற்று வருகிறது. ஏன்? பிராமணரில் அத்தனைபேரும் காங்கரசில் இருக்கிறார்கள், ஆதரிக்கிறார்கள். ஆனால் திராவிட இயக்கம் வெற்றிபெறவில்லை என்பது மாத்திரமல்லாமல் இன்று பல இடங்களில் அது காங்கரஸ்காரர்களால் அடி, உதை, குத்து, வெட்டு ஆகியவைவாங்கி படாதபாடும், இம்சையும், தொல்லையும், இழிவும் அனுபவித்து வருகிறது. ஏன்? "தேவனே! அவர்கள் செய்வது இன்னது என்று தெரியாமல்" பல திராவிடர்கள் எதிரிகளுக்கு கூலியாய் இருந்து வருகிறார்கள் என்பதல்லாமல் வேறு என்ன!

## பிராமண அனுமான் உண்டா?

அதாவது திராவிடன், தொழிலாளி "சூத்திரன்" என்பவன் காங்கரசில் கொடிதூக்கி, பார்ப்பனர்களுக்கு வால்பிடித்து அனுமார் வாழ்வு வாழ்வதைப் பார்க்கிறோம். ஆனால் ஒரு "பிராமணன்", அதாவது ஒரு பார்ப்பனர் திராவிடர் கழகத்தில் திராவிடர்களுக்கு அனுகூலமாக இருக்கிறார் என்று விரல் விட முடியுமா? சொல்லுங்கள் பார்ப்போம். தொழிலாளத் தோழர்களே! நீங்களும் வெற்றி பெறாததற்குக் காரணம்

என்ன? அடி, உதை, குத்து, வெட்டு அனுபவிப்பதற்குக் காரணம் என்ன? நமக்கு மானம் இல்லை. நம்மை பார்ப்பனர், பார்ப்பன மதம், பார்ப்பனக் கடவுள், பார்ப்பன சாஸ்திரப் புராணம் தொழிலாளியாக, சூத்திரனாக, 4வது வருணத்தானாக ஆக்கி ஆதிக்கம் செலுத்துகிறதே என்கின்ற கவலை இல்லை என்பதல்லாமல் வேறு என்ன சொல்லமுடியும்?

கவலையுள்ள எங்களைப் போன்றவர்களையும் திராவிடப் பிள்ளைகள் பார்ப்பனர்களுடன் சேர்ந்துகொண்டு அடிக்கிறார்கள், உதைக்கிறார்கள், காலித்தனம், காலாடித்தனம் செய்கிறார்கள் என்பதல்லாமல் வேறு என்ன? இப்படிப்பட்ட மானம்கெட்ட, மானத்தில், ஈனத்தில் கவலையில்லாத ஜாதி எந்தக்காலத்திலும் முன்வரமுடியாது. ஆகவே நம் திராவிடர்களுக்கு, தொழிலாளர்களுக்கு, சூத்திரர்களுக்கு விடுதலை, மாறுதல் வேண்டுமானால் முதலில் மானம் வரவேண்டும். எதிரிக்கு விபீஷணனாய், அனுமாராய் இருப்பதைப்பற்றி வெட்கப் கட்டு எதிரியை, எதிரி ஆயுதத்தை வெறுக்கவேண்டும். தனது இழிவுக்கு அடிப்படை எது என்று பார்த்து அதைப் பெயர்த்து தகர்த்தெறியவேண்டும். அந்த நிலை அடையாத தொழிலாளி 'சூத்திரன்' எவனும் மாறுதல் அடையமுடியாது. இது உறுதி, உறுதி, உறுதி என்று முக்காலும் சொல்லுவேன்.

## விஷமப் பிரச்சாரம்

சில தொழிலாளர் தலைவர்கள் என்பவர்கள் என்மீது குரோதம் கொண்டிருக்கிறார்கள். என்னைப்பற்றி விஷமப் பிரசாரம் செய்கிறார்கள். நீங்கள் வாயில்லாப்பூச்சி, அறிவில்லா ஜந்து என்கின்றமாதிரி அந்தவஞ்சகப்பேச்சுக்குக்காது கொடுத்துப் பைத்தியக்காரர்களாக இருந்து வருகிறீர்கள். என்னவென்றால்,

"ராமசாமி நாயக்கர் மதத்தில் கடவுளில் பிரவேசிக்காவிட்டால் நான் அவருடன் நேசமாக இருப்பேன். ஆனால் அவர் நாத்திகம், மதத்துவேஷம் பேசுகிறார். ஆகையால் ஜாக்கிரதையாய் இருங்கள்"

என்று உங்கள் தலைவர்களிற் சிலர் சொல்லி உங்களை என்னிடம் அணுகவிடாமல் செய்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. ஆனால் உங்களை ஏய்க்க இப்படிப்பட்ட பேச்சுப் பேசும் உணர்ச்சி உள்ளவர்கள் தொழிலாளர்களுக்குத் தலைவர்களாக இருக்க யோக்கியதை உண்டா என்று கேட்கிறேன். இவர்களை நம்பினவர்கள் முன்னால் வரமுடியுமா என்று கேட்கிறேன்?

எது மதம்? எது கடவுள்? என்பது இந்த அன்னக்காவடிகளுக்குத் தெரியுமா என்று கேட்கிறேன். நான் எந்த மதத்தை, எந்தக் கடவுளை ஒழிக்க வேண்டும் என்று சொல்லுகிறேன் என்பது இந்தத் தற்குறிகளுக்குத் தெரியுமா என்று கேட்கிறேன்.

## நாஸ்திகப் பூச்சாண்டி!

எந்த ஒருமதம் ஒருமனிதனை, பிராமணனாகவும் ஒரு மனிதனைச் சூத்திரனாகவும் அதாவது தொழிலாளியாகவும் பாட்டாளியாகவும், பறையனாகவும் உண்டுபண்ணிற்றோ அந்த மதம் ஒழியவேண்டும் என்று சொல்லுகிறேன். ஒழிய வேண்டுமா, வேண்டாமா? (ஆம், ஒழியவேண்டும் என்னும் பேரொலி) எந்தக் கடவுள் ஒருவனுக்கு நிறையப் பொருள் 'கொடுத்தும்' ஒருவனுக்குப் பாடுபடாமல் ஊரார் உழைப்பில் வாழ உரிமை கொடுத்தும் மற்றொருவனை உழைத்து உழைத்து ஊரானுக்குப்போட்டுவிட்டுச் சோற்றுக்குத் திண்டாடும்படியும், இரத்தத்தை வேர்வையாய்ச் சிந்தி உடலால் உழைத்தவண்ணம் இருந்து கீழ் மகனாய் வாழும்படியும் செய்கிறதோ அந்தக்கடவுள் ஒழியவேண்டும் என்று சொல்லுகிறேன். அந்தக் கடவுள் ஒழிய வேண்டுமா, வேண்டாமா? (ஆம் ஆம் ஒழிந்தே ஆகவேண்டும் என்கின்ற பேரொலி) ஆகவே தோழர்களே! இது சொன்னால் நான் நாத்திகனும், மத துவேஷியுமா? "ஆம் ஒழியவேண்டும்" என்று சொன்ன நீங்கள் மதத்துவேஷியா, நாத்திகர்களா? தோழர்களே! நம்மை நாத்திகர்கள் என்கின்ற இந்தப் பாஷாண்டங்கள் தான் நாத்திகர்களாவார்கள்.

## திருடனை வழிகேட்பதா?

தோழர்களே! அந்தப்படி ஒரு மதமும் இல்லை, கடவுளும் இல்லை என்பதை உணருங்கள். அயோக்கியர்கள் தங்கள் சோம்பேறி வாழ்வுக்கும் தந்திர வாழ்வுக்கும் ஆதரவாக ஏற்படுத்திக்கொண்ட பித்தலாட்டமும் சூழ்ச்சியும்தான் இப்படிப்பட்டக் கடவுளும் மதமுமே ஒழிய அன்பே சமயமாகவும், சம அருளே கடவுளாகவும் இருப்பவைகளை நான் குறை கூறுவதே இல்லை. நீங்கள் நம்புங்கள். மக்கள் யாவரையும் சமமாய் படைத்து, சமமாய் நடத்தும் கடவுள் இடமும், மதத்திடமும் நமக்கு ஏன் வெறுப்பு ஒழிப்பு வரவேண்டும்? ஆகையால் நம்மைப்பற்றிக்குறை கூறுபவர்கள் நம் எதிரிகளின் நிபந்தனையில்லாத அடிமைகளேயாவர். நீங்கள் பிறவி தொழிலாளர் (சூத்திர) ஜாதியில் இருந்து விலகவேண்டுமானால்

பிராமணன் சூத்திரன் உள்ள மதம் ஒழிந்தாகவேண்டும். உங்களில் எத்தனைபேர் இருப்பீர்கள் அப்படிப்பட்ட மதத்தை ஒழித்துக் கொண்டவர்கள். இழிமைத் தன்மையில் இருந்து நீங்கள் விடுபடவேண்டுமானால் நீங்கள் உழைத்து உழைத்து பாடுபட்டு குறையாளராய், இரப்பவர்களாய் இருப்பது மாறியே ஆகவேண்டுமானால் உங்களை இப்படிப்படைத்ததாகச் சொல்லப்படும் கடவுள் இருந்தால் அது ஒழிந்தே ஆகவேண்டும். இதுதான் தொழிலாளிக்கு, சூத்திரனுக்கு 'சஞ்சீவி மந்திரம்' என்பேன். திருடனைத் தடம் கேட்பதுபோல் பார்ப்பானைப்போய் உங்கள் கொடுமைக்குப் பரிகாரம் கேட்டால் அவன் மேலும் கொடுமைக்குள்ளாக்குவான். பார்ப்பனர்களின் கூலிகளைப்போய் பரிகாரம் கேட்டால் அவர்கள் மேலும் கொடுமைக்குள்ளாக்குவார்கள்.

## பாரதியும் நம் வள்ளுவரும்

உழைப்பாளிகளின் விடுதலைக்குப் பார்ப்பனர்கள் ஜன்மவிரோதிகள் என்று எண்ணுங்கள். உதாரணமாக இன்று பார்ப்பனக் கம்யூனிஸ்டுகளும் அவர்கள் வால்களும் பொதுவுடமைக்கு ஒரு பாட்டுச் சொல்லுவார்கள். அதாவது "தனி ஒருவனுக்கு உணவில்லைஎனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்ற பாட்டைப்பாடி, இது பாரதியார் என்ற பார்ப்பனர் பாடிய பொதுஉடைமைப் பாட்டு என்பார்கள். இந்தப் பாட்டு பித்தலாட்டப்பாட்டாகும். பாட்டாளி மக்களை, ஏழைகளை வேறுபக்கம் திருப்பிவிட்டு ஏய்க்கும் பாட்டாகும். பட்டினிக்கும் உலகத்திற்கும் என்ன சம்பந்தம்? உலகில் என்ன இல்லை? இப்படிப்பட்ட உலகத்தை ஒழிப்பது எதற்கு ஆக? ஒழித்தால் வருவது என்ன? என்றெல்லாம் பார்த்தால் இது அர்த்தம் அற்ற, அறிவு அற்ற அல்லாவிட்டால் வஞ்சகப் பேச்சு என்றுதான் சொல்லவேண்டும். ஆனால் இதுபற்றி நம்மவர் சொன்னதைக் கேளுங்கள். அதாவது வள்ளுவர் என்ன சொன்னார் பாருங்கள். அடமடையா! உலகத்தை அழிக்கவேண்டாமடா. உலகையுண்டாக்கினவனை அழியடா என்றார். அதாவது,

"இரந்தும் உயிர்வாழ வேண்டின்
பரந்து கெடுக இவ்உலகியற்றியான்"

என்று சொல்லியிருக்கிறார். காரணம் என்ன தெரியுமா? அந்தப்பாட்டுபாடினவன் பார்ப்பனன். ('பிராமணன்') இந்தப் பாட்டுப் பாடினவன் பாட்டாளி ('பறையன்'). அவன் இனம் பிழைக்க அவன் பாடினான், இவன் இனம் பிழைக்க இவன் பாடினான். இதைத்தான் நாங்கள் திராவிட கழகத்தார் பாட்டாளி மக்கள் இயக்கத்தார், தொழிலாளர் சங்கத்தார்; "சூத்திர"வகுப்பார்சொல்லுகிறோம். இதை நாஸ்திகமென்று ஒருவன் சொல்வானேயானால் அவனை அறிவாளி என்றோ,யோக்கியன் என்றோ நீங்கள் சொல்லமுடியுமா?

## கம்யூனிஸ்ட் பல்லவி

"செல்வம் கடவுள் கொடுத்தார். தொழிலாளிகளைக் கடவுள் சிருஷ்டித்தார். கடவுள் செயலால் இது இரண்டும் சிருஷ்டிக்கப்பட்டு காப்பாற்றப்பட்டு வருகிறது. பிச்சையெடுப்பது அவன் தலைவிதி" என்று நினைப்பவர் தொழிலாளர் இயக்கத்தில் அங்கத்தினராய் இருக்கவோ, தொழிலாளர் இயக்கத்தை நடத்தவோ சிறிதும் தகுதி அற்றவர் என்றே சொல்லுவேன். அவர் எவ்வளவு பண்டிதராய் இருந்தாலும் பக்தனாயிருந்தாலும் தொழிலாளர் இயக்கத்திற்குப் பதரே. எதிரியேயாவார். இதனால் அதாவது, இப்படிச் சொல்லுவது நாத்திகமானால், இதற்காக நீங்கள் எங்களுடன் சேரக்கூடாது என்றால் உங்கள் சம்பந்தம் இல்லாமலே எங்களால் ஆனதை எங்களுக்கும் உங்களுக்குமாக இருந்து வரும் திராவிட கழகத்தில் நாங்கள் தொண்டாற்றி வருகிறோம். திராவிடர் விடுதலைதான் தொழிலாளர் விடுதலையாகும்.

எனவே இந்தக்காலத்து காங்கரஸ்காரர், காங்கரஸ் பக்தர்கள் யோக்கியதை இதுவானால் கம்யூனிஸ்ட் பக்தர்களும் எங்களை வைவதும் உங்களை அணைப்பதும் எங்களுக்கு ஆச்சரியமாய் இருக்கிறது. கம்யூனிஸ்ட்காரருக்கு எப்படி ஒருவன் சூத்திரனானான்? கீழ் ஜாதியானான்? என்பது முதலில் தெரியவேண்டும். ஏனெனில் சூத்திரன்தான் அதாவது கீழ்ஜாதியான்தான் இந்த நாட்டில் ஏழையாய் தொழிலாளியாய் மனிதஉரிமை இல்லாதவனாய் உழைப்பின் பயனை அனுபவியாதவனாய் மூடனாய் இருக்கிறான். அவனைக் கீழ்ஜாதி தன்மையில் இருந்து மாற்றிவிட்டால் இந்த நாட்டில் ஒரு ஜாதி பணமில்லாவிட்டாலும் சுகஜீவியாய் எஜமானாய் இருப்பதும், பணம் இருந்தும் பாட்டாளியாய், நல்வாழ்வு இல்லாமல் கீழ்வாழ்வாய், அடிமையாய் இருப்பதும் பெரும்பாகம்ஒழிந்துவிடும். இதைக் கம்யூனிஸ்டுகள் உணராமல் "தங்கம் எடுத்தவன் யார்? முத்து குளித்தவன் யார்? வயல்கள் செய்தவன் யார்? வரப்பு செதுக்குகிறவன் யார்? மாடமாளிகை கட்டினவன் யார்? நந்தவனம் வைத்தவன் யார்?.... அனுபவிப்பவன் யார்?" என்று சோம்பேறி பாட்டுப்பாடினால்

போதுமா? இது செய்தவர்கள் யார், அனுபவிப்பவர் யார் என்பது கடுகளவு அறிவுள்ளவனுக்கும் தெரியுமே! அதாவது மடையன், ஏமாளி, மானமற்றவன் செய்தான்; தந்திரசாலி, வஞ்சகன் கடவுள் பிரசாரக்காரன் அனுபவிக்கிறான். ஆகவே மடையன் புத்திசாலியாகி, மானமற்றவனுக்கு மான உணர்ச்சி ஏற்பட்டு இந்த நிலைக்குக் காரணம் நமது ஏமாளித்தனமே ஒழிய கடவுளல்ல, மதமல்ல, முன்ஜன்மமல்ல, விதி அல்ல இவையெல்லாம் புரட்டு இவைகளைத் தகர்த்தெறிவது எனது முதல்வேலை" என்று எண்ணுகிறானோ அவனே முதலாளிகளை செல்வவான்களை மாடமாளிகை கூட கோபுரங்கள், அரண்மனையில் வசிப்பவர்கள் ஆகியவர்களை ஒழிக்கத்தகுந்தவனாவான். அப்படி முற்படாத தன்னைக் கம்யூனிஸ்ட்என்பவன் "தங்கம் பண்ணிக்கொடுக்கிறேன், எனக்குக் கொஞ்சம் சாப்பாடுபோடு" என்கின்ற சாமியாரேயாவான்.

தோழர்களே! இப்போது யோசித்துப் பாருங்கள். திராவிட கழகத்தார் தொழிலாளர்களின் நண்பர்களா? கம்யூனிஸ்டுகள் அல்லது புராணப் பிரசங்க பண்டிதரும், பட்டைநாமக்காரரும், விபூதி சந்தனப் பொட்டுக்காரர்களும், சிவசிவ ராமராமா என்னும் ருத்திராட்சப்பூனைகளும் தொழிலாளர் நண்பர்களா என்று பாருங்கள்.

இந்த நாட்டில் தொழிலாளர் இயக்கம் பார்ப்பனர்களாலும் அவர்களது அடிமைகளாலும் முதலாளிகளின் கூலிகளாலும் ஏற்பட்டது என்பது எனக்குத்தான் தெரியும்; நீங்கள் பலர் அந்தப் பித்தலாட்டக் காலத்தில் பிறக்கவேயில்லை.

தொழிலாளர்கள் தலைவர்கள் யார்? காங்கரசிலிருந்த பார்ப்பனர்கள் அத்தனை பேரும் மற்றும் பல சுகபோகிகளும் மதவாதிகளுமே தலைவர்கள் ஆவார்கள்.

அவர்கள்தான் அந்த சந்ததிகள். இன்னமும் தொழிலாளர் ஸ்தாபனத்தில் ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை விரட்டி அடிக்கும்நாள் வந்தால்தான் நீங்கள் நிரந்தர (சூத்திர) தொழிலாளிகளாக இல்லாமல் இருக்கமுடியும். இல்லாவிட்டால் உங்களுக்கு இந்தக் கிளர்ச்சியும் காங்கரசுக்கு—பார்ப்பனர்களுக்கு ஆதாரமாய்க் கலாட்டா செய்வதும்தான் கண்ட பலன். தோழர்களே இந்த முகவுரையோடு இனி உங்கள் தற்கால சங்கதிபற்றி பேசுகிறேன்.

## கூலிஉயர்வு முக்கியமல்ல

இன்று நீங்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறீர்கள். இதை நாங்கள் முழுமனதோடு ஆதரிக்கிறோம். ஆனால் கூலி உயர்வுக்குச் செய்யும் வேலை நிறுத்தத்தை நாங்கள் அவ்வளவு முக்கியமானதாகக் கருதவில்லை. ஏனெனில் அது தொழிலாளிகளைத் தொழிலாளர்களாகவே இருக்க வைக்கும் வேலை என்பது எங்கள் கருத்து. ஏன் என்றால் தொழிலாளிக்கு அதிக கூலியும், வீடு வைத்தியம், படிப்பு வசதியும் முதலாளி செய்வது என்பது, ஒருவன் தன் மனைவியை எப்போதும் அடிமையாய் அடைத்து தனது நலனுக்குவைத்திருப்பதில் அவளை அந்தக் காரியத்தில் உற்சாகமூட்டி நல்ல பக்தி விஸ்வாசமுள்ள அடிமையாகச் செய்ய தங்க வைர நகை, பட்டுச்சேலை, சீப்பு, சோப்பு, கண்ணாடி, வாசனை எண்ணெய், பவுடர் வாங்கிக்கொடுப்பது போலவே தவிர சமஉரிமை அடைவதற்கு அல்ல என்பது போலவேயாகும்.

தொழிலாளிக்கு வேண்டியது கூலியும், நல்வாழ்க்கை வாழச் செலவுமே அல்ல என்பதை ஒவ்வொரு தொழிலாளியும் கவனத்தில் வைக்கவேண்டும். அவனுக்கு வேண்டியது தொழிலின் பயனை சமஉரிமையுடன் அனுபவிக்கவேண்டும், அடையவேண்டும் என்பதோடுதான் அந்த யந்திரசாலைக்கு ஒரு கூட்டாளியாக பங்காளியாக இருக்கவேண்டுமே ஒழிய ஒரு தொழிலாளியாக வேலைக்காரனாக இருக்கப்படாது என்பதேயாகும். தொழிலாளி முதலாளி தன்மை முறை இருக்கவே கூடாது. தொழிலாளர் சங்கம் என்கின்ற பெயரும் இருக்கக்கூடாது. ஒரு தொழிற்சாலைக்கு அங்கு வேலை செய்பவர்கள் பங்காளிகளாக அல்லாமல் கூலிக்காரர்களாக இருப்பது என்பது முட்டாள்தனம், அடிமைத்தனம், மானமற்றதனம் ஆகும்.

## மூலதனத்தில் சரி பங்கு

தொழிலாளி தன் சரீரத்தினால் நேரே பாடுபடுகிறான். முதலாளி என்பவன் வேறு தொழிலாளிகள் பாடுபட்ட பாட்டின் பயனாய் மீதப்படுத்தப்பட்டப்பணத்தை முதலாகப் போடுகிறான் என்பதல்லாமல் முதலாளிக்கு முதல் ஏது? சரீர உழைப்பு ஏது? பல தொழிலாளர்களை மோசம்பண்ணி அவர்களுக்குச் சரி பங்களிக்காமல் வஞ்சித்தப் பொருள் அல்லாமல் எப்படி முதலாளிக்குப் பணம் வந்தது? பாடில்லாமல்

தேவை

டபுள்பீடர் மிஷினில் வேலை செய்ய திறமைவாய்ந்த மிஷின்மேன் தேவை. முன் அனுபவம், குறைந்த பட்ச சம்பளம் இவைகள் குறித்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு விண்ணப்பித்துக்கொள்ளவும்.

M. M.

C/o குடி அரசு ஆபீஸ், ஈரோடு.

பணம் எது? பாடில்லாத பணம் திருட்டுதானே? ஆகவே மோசம் பண்ணின, வஞ்சித்த, திருடிய பணத்துக்கு லாபம் பூராவும் தருவதும், பாடுபட்டவனுக்குச் சோறுமாத்திரம் என்றால், கொஞ்சம் நல்ல சோறு என்றால் இதுவா தொழிலாளர் இயக்க லட்சியம்? என்று கேட்கிறேன்.

பணத்தைப்போட்டு யந்திரம் வாங்கி தொழிலாளியைப் போட்டு வேலை செய்தால் தானே லாபம் வருகிறது! இந்த லாபத்தில் பெரும்பாகம் வேலைக்குத்தானே கிடைக்க வேண்டும்? முதலுக்கு சிறு வட்டிதானே கிடைக்கவேண்டும்? அதுவும் மிஷினுக்கு எண்ணெய் போடுவது எப்படியோ, எஞ்சினுக்கு விறகு போடுவது எப்படியோ அதுபோல் அதில் வேலைசெய்பவருக்கும் அந்த மனித மிஷின் கெடாமல் எண்ணெயும் விறகும்போல் நல்ல சாப்பாடும், நல்ல சுகமும் கொடுக்கவேண்டியது இயற்கை தர்மமாகும். ஆகவே நிர்வாகஸ்தன் சம்பளம், முதலுக்கு வட்டி, மிஷினுக்கு எண்ணெய் விறகு என்பனபோல் தொழிலாளிக்கும் வாழ்க்கைச் சௌகரியம் செய்து கொடுத்துவிட்டு மீதி உள்ள லாபத்தில் மிஷின் தேய்மானத்திற்கு ஒரு தொகை ஒதுக்குவதுபோல் தொழிலாளியின் ஓய்வு கால நல் வாழ்க்கைக்கும் ஒரு தொகை ஒதுக்கி வைத்துவிட்டு மீதியையே முதலும் வேலையும் பங்கிட்டுக்கொள்ள வேண்டும். நாளா வட்டத்தில் யந்திரசாலை தொழிற்சாலைகள் தொழில் செய்பவர்களுக்கு சரிபாக சொந்தமாக ஆகவேண்டும். இதற்காக வல்லவா இந்தக் காரியத்திற்கு அல்லவா தொழிலாளர் இயக்கம், கம்யூனிஸ்ட் இயக்கம் ஆகியவை இருக்க வேண்டும்? ஆனால் இன்று இவை இரண்டும் முதலையும் முதலாளிகளையும் பெருக்கிக் கொழுக்கவைத்து தொழிலாளிகளுக்கு மயக்கத்தைக் கொடுக்கும் மதுபோல் கொஞ்சம்கூலி உயர்வும் சிறிது சௌகரியமும் செய்து கொடுத்து அவர்கள் என்றும் தொழிலாளிகளாகவே இருக்கவைக்கும் சதிவேலை ஸ்தாபனம் இருந்து வருகின்றது.

பழைய ரயில்வே 'கேயிடு'

இதிலிருந்து தெரிவதென்னவென்றால் தொழிலாள ஸ்தாபனங்களுக்கும் தொழிலாளர் தலைவர்களுக்கும் தொழிலாளிகளுக்கும் இனி வேண்டியது என்ன என்பதே தெரியாது என்றுதான் சொல்லவேண்டும். காரல் மார்க்சின் காலம்வேறு, லெனின் காலம் வேறு, இந்தக் காலம் வேறு. இந்தக்காலத்துக்கு வேண்டியது பழயகாலத்தில் பழய பெரியார்கள் கண்டுபிடித்ததும் சொன்னதுமாகிய சுற்றில் இருக்கமுடியாது. புலை போராது. 1946ஜூன் மாதத்திய ரயில்வே கெய்டு ஜூலை மாதத்துக்குச் செல்லாது. ரயில் தவறிவிடும். ஆகவே தொழிலாளிகள் தங்களை இனி அரை நிமிடமும் தொழிலாளி என்று எண்ணாமல் முதலாளிகள் சொந்தக்காரர்கள் ஆகப் போகிறவர்கள் என்று எண்ண வேண்டும். இதற்கு அவர்கள் இன்றைய சுயநலப்புலிகளான தலைவர்களிடம் இருந்து விடுபடவேண்டும். புராண வாழ்வுக்காரர்களை, பார்ப்பன (பிராமண)ர்களை விட்டு விலகவேண்டும். பார்ப்பனர்களைவிட புராணக்காரர்களான பார்ப்பன அடிமைகளைவிட முதலாளிகள் அதிக கெட்டவர்கள் அல்ல. ஆகவே தொழிலாள தோழர்கள் என்கின்றவர்களே! நீங்கள் முதலில் உங்கள் ஆசாபாசத்தையும் லட்சியத்தையும், ஸ்தாபனத்தையும், தலைவர்களையும் திருத்திக் கொள்ளுங்கள்.

இதுவரை நான் உங்களுக்கு தொழிலாளர்களைப் பற்றிய எனது கருத்தை, திட்டத்தை முகவுரையாகச் சொன்னேன்.

'ஸ்ட்ரைக்''

இனி உங்கள் விஷயமாகிய தற்கால பிரச்சினைபற்றிப் பேசுகிறேன். அதாவது நீங்கள் இப்போது வேலை நிறுத்தம் செய்திருக்கும் விஷயம்பற்றிப் பேசுகிறேன்.

உங்கள் வேலை நிறுத்தத்திற்கு என்ன காரணம் இருந்தாலும் வெளிநாட்டு பட்டாணியர்களைக் கொண்டுவந்து உங்களுக்குக் காவல்காரர்களாகப் போட்டு அவர்கள் மரியாதை இல்லாமல் உங்களிடம் நடந்துகொள்ளும் மூர்க்கத் தனத்தைப் பற்றி நீங்கள் வருத்தமடைந்து இனி அப்படிப்பட்ட அயலார் ஆதிக்கமும் அத்துமீறின காரியமும் மில்லில் இருக்கக்கூடாது என்கின்ற கருத்தின்மீது வேலை நிறுத்தம் செய்திருக்கிறீர்கள். இந்த உணர்ச்சி உங்களுக்கு ஏற்பட்டது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். இது இன்னும் ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு திராவிடனுக்கும் ஏற்படவேண்டியது அவசியமாகும். அதற்காக நீங்கள் செய்யும் கிளர்ச்சி பாராட்டத்தக்கதேயாகும். உங்கள் மில் முதலாளிகள் இதற்கு இணங்க வேண்டியதும் அவசியமும் நேர்மையும் ஆகும். உங்கள் முதலாளிகள் நிர்வாகிகள் யார்? உங்கள் உழைப்பால் பயனடைபவர்களே யாவார்கள்.

உங்கள் உழைப்புக்குக்கூலி, அதாவது உங்களுக்குச்சாப்பாடு போட்டுவிட்டதால் அவர்கள் கடன் தீர்ந்துவிட்டதாகக் கருதக்கூடாது. ஒவ்வொரு ஜீவனுக்கும் உணவு என்பது இயற்

கை நியதியாகும். அனேகஜீவன்கள் உழைப்பு இல்லாமலே உணவுகொண்டு ஜீவிக்கின்றன. அநேக மனித ஜீவன்களும் உழைப்பு இல்லாமல் பெருவயிறோடு நடமாடுகின்றன. நீங்கள் உழைத்துவிட்டு உணவுகொண்டு ஜீவிப்பது என்பது மற்றவர்களுடைய உதவியால் அல்ல, அதுஇயற்கையாலேயே, நிர்ப்பந்தத்தாலேயேயாகும்.

## வெளிநாட்டான் ஏன்?

உங்கள் உழைப்பால் உங்கள் முதலாளிகள் உணவு கொள்வதுடன் இன்பம் அனுபவிக்கிறார்கள். பொதுமக்கள் இயற்கை நியதிப்படி உணவு கொள்வதுடன் உங்கள் உழைப்பால் ஆடை அணிகிறார்கள். ஆகவே உங்கள் முதலாளிகளும் பொதுமக்களும் உங்களுக்கு உணவைத் தவிர வேறு காரியங்களுக்கும் அவர்கள் கடமை—கடன்பட்டிருக்கிறார்கள். அந்த முறையில் முதலாளிகள் உங்களுடைய இந்த விருப்பத்தை நிறைவேற்றிவைக்க வேண்டியவர்களாவார்கள். இந்தப் பிரச்சினை உங்களுடைய உணவு சவுகரியத்தைப் பற்றியதல்ல. உங்கள் சுயமரியாதையைப்பற்றியதே. உங்களுடைய சுயமரியாதையை மாத்திரம் பற்றியதல்ல, திராவிட சமுதாயத்தையும், திராவிட நாட்டையும் பற்றிய சுயமரியாதையைப் பொறுத்தது. ஆகவே, இதில் வெற்றிபெற்றாலும், பெறாவிட்டாலும் போராடியே தீரவேண்டிய பிரச்சினையாகும். நாடு விடுதலை, நாடு சுதந்தரம், நாடு சுயமரியாதை பெற்றுவிட்டது என்றால் என்ன அர்த்தம்? அன்னியன் அன்னியநாட்டான் ஆதிக்கமும் வியாபாரப் பெருமையும், தலைமையும் இந்த நாட்டில் இருப்பது என்பதுதான் அர்த்தமா? என்கின்றேன்.

## அவ்வளவும் அன்னியமயம்

இன்று நம்நாடு சகல துறையிலும் அன்னிய ஆதிக்கமே. நீங்கள் உங்கள் மில் காவலாளி அன்னியன், அவன் கூடாது என்கின்றீர்கள். ஆனால் மற்ற விஷயத்தில் பாருங்கள். இந்த நாட்டுத்தலைவர்கள அன்னியர்கள் இந்த நாட்டு அதிகாரிகள் பெரிதும் அன்னியர்கள். இந்த நாட்டு பிரதம மந்திரி அன்னியர். மற்றும் எவ்வளவோ ஜீவநாடியான முக்கியஸ்தர்கள் அன்னியர்கள். இந்தப்படி அன்னியர் என்பவர்கள் யார் என்றால் நம் இனத்தவரல்லாதவர், நம்மொழியினரல்லாதவர், நம் வகுப்பினரல்லாதவர், நம்மை சமமாகக் கருதுபவரல்லாதவர், நம்மைச் சுரண்டாதவரல்லாதவர், நம்மை இழி மக்களாய்க் கருதாதவர்களல்லாதவர்களும், நம்மை இந்நாட்டு கல்வி, ஆட்சி ஆகியவைகளுக்குத் தகுதியற்றவர்கள் என்பவர்களும் நம் நாட்டுப் பழக்கவழக்கம் நாகரீகம் ஆகியவைகளில் வேறுபட்டவர்களும், நம் திராவிடநாட்டு இன்றைய எல்லைக்கு வெளிப்பட்டவர்களும் அன்னியர்களே யாவார்கள் என்கின்றேன். இந்த உணர்ச்சி நம் மக்களுக்கு வருவதற்குஆககுறைந்த அளவு அன்னியன் காவல்காரனாகக் கூட இருக்கக்கூடாது என்கின்ற உணர்வு உங்களுக்கு வந்தது போற்றக்கூடியதேயாகும்.

நம்நாட்டு ஆட்சியில் இன்று பிரதம மந்திரி அன்னியர் அதாவது அவர் நம் இனத்தவரல்ல. நம் வகுப்பினரல்ல. நம்மை சமுதாயத்தில் சரிசமமாய்க் கருதுபவரல்ல. நம் மக்களைவிட எந்தவிதத்திலும் புத்தியில் திறமையில் நேர்மையில் மேம்பட்டவரும் அல்ல. அப்படிப்பட்ட ஒருவர் இன்று ஆட்சி மன்றத்தில் உங்களுக்குப்பிரதமமாய் இருக்கக்காரணம் என்ன? திராவிடரின் மான உணர்ச்சியற்றதனம் என்பதல்லாமல் வேறு என்ன சொல்லமுடியும்?

நம் அரசியல் தலைவர்கள் அன்னியர்கள். நம் பண்டிதர்களும், மகாத்மாக்களும், மௌலானாக்களும், சர்தார்களும் ஏன் நம் நாட்டவராய் நம்மவராய் இருக்கக்கூடாது? காவல்காரர்கள்கூட நம்மவராய் இருக்க வேண்டும் என்று கருதிய உங்களுக்கோ, உங்கள் ஸ்தாபனங்களுக்கோ, உங்கள் தலைவர்களுக்கோ இந்தக் கவலை எப்போதாவது தோன்றியதுண்டா? உங்கள் நாட்டவரில் ஒருவரை மகாத்மாவாகச் செய்துகொள்ள, சொல்லிக்கொள்ள உங்களுக்கு ஆள் இல்லையா? உங்கள் இனத்தவர் ஒருவரை, உங்கள் வகுப்பினர் ஒருவரை ராஷ்டிரபதியாக ஆக்கிக்கொள்ள உங்களுக்கு ஆள் இல்லையா? இருந்தும் உங்களுக்கு அது விஷயத்தில் கவலையும் மானமும் இல்லையே ஏன்?

## மனம் பதறவில்லையே

தோழர்களே! இந்த நாடும், இந்த இனமும். சுதந்திர உணர்ச்சியும், சுயமரியாதைத் தன்மையும் கொண்டதானால், இங்கு நேரு பார்க், காந்தி சவுக், திலகர் கட்டம் இருக்கலாமா? இதற்குப் பெயர்தானா பூரண சுயேச்சை என்பது? இதற்குப் பேர்தானா இது சுயமரியாதை உள்ளநாடு என்பது? இவைகளைப்பார்த்து உங்கள் மனம் பதறவில்லையே! வயிறு எரியவில்லையே!! "தென்னாப்பிரிக்காவில் வெள்ளையன் அட்டூழியம்" என்கின்ற உங்களுக்குத் திராவிடநாட்டில் ஆரியன் அட்டகாசம், திராவிட நாட்டில் திராவிடர்களை ஆரியன் சித்திரவதைசெய்கிறான். திராவிடநாட்டில் திராவிடரை ஆரியன் தீண்டப்படாதவன் என்கிறான். தாசி மகன் வேசி மகன் அடிமை என்கிறான் என்று எந்தத் திராவிடனுக்கு மானஉணர்ச்சி ஏற்பட்டு உள்ளம் துடிக்கிறது? இரத்தம் துடிக்கிறது? திராவிடர்களுக்கு ஆரியனா குரு சன்னிதானம்? திராவிடனுக்கு ஆரியனா சுவாமி? திராவிடனுக்கு ஆரியனா எஜமான், அதிகாரி, ஜட்ஜ், கலெக்டர், மேஜிஸ்ட்ரேட், குலகுரு? நம் சிறிதும் மானஉணர்ச்சி அற்ற சமுதாயம், நம்நாடு ஒரு காட்டுமிராண்டி அடிமைநாடு என்பதற்கு இதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

தென் ஆட்ரிக்காவிலே, வெள்ளையன், இந்திய ஆரியன், திராவிடர்களை நடத்துவதில், கொடுமைப் படுத்துவதில், இழிவு செய்வதில் 100ல் ஒரு பங்கு செய்கிறானா? தோழர்களே தென்னாப்பிரிக்கா வெள்ளையர்களை குறைகூறுபவர்கள், அவர்கள்மீது மக்களுக்கு துவேஷத்தை உண்டுபண்ணுகிறவர்கள் இதே ஆரியர்கள். ஆனால் அதை விடகொடுமையாகத் திராவிடர்களை நடத்துகிறவர்கள் இதே ஆரியர்கள் இதை உணராமல் ஆரியனுக்கு வால்பிடித்து அனுமாராய் அவன்பின் திரிபவர்கள் திராவிடர்கள். இது தானே' இன்றைய நம் நிலைமை? இன்று இந்தத் தமிழ்நாட்டில் ஆரிய அட்டூழியம் எவ்வளவு என்பது உங்களுக்குத் தெரியுமா? ஆரிய ஆதிக்கம் மந்திரிசபை வந்தநாள்தொட்டு நம்மவர்களுக்குக் கண்டகண்ட பக்கமெல்லாம் அடி, உதை, குத்து, வெட்டு, கொடுமை, கொள்ளை, வழிப்பறி நடந்தவண்ணம் இருக்கிறது. இதைப் பற்றி யார் கவலைப்பட்டார்கள்?

## கேட்பாரில்லையா?

இந்த மாதிரி ஆரியர்களுக்கோ ஆரியப் பெண்களுக்கோ, ஆரியர் கொட்டகைகள், கட்டடங்கள் ஆகியவைகளுக்கோ நடந்திருந்தால் அவர்கள் எவ்வளவு முயற்சிகள் எடுத்துக் கொண்டிருப்பார்கள். எவ்வளவு சீக்கிரம் அடக்கி இருப்பார்கள்? இன்று நாம் செல்லும் பக்கங்களில் எல்லாம் நம் கூட்டங்கள் நடக்கும் பக்கங்களில் எல்லாம் நடக்கும் அட்டூழியங்களைப் பாருங்கள். திராவிட வாலிபர்களுக்கு மாணவர்களுக்கு, தொழிலாளர்களுக்குச் சிறிதாவது மானஉணர்ச்சி இன உணர்ச்சி இருக்கிறதா என்று கேட்கிறேன். மே மாதம் 12ந்தேதி மதுரைக் காலித்தனம் ஒருபக்கமிருக்க அதற்கு அப்புறம் பல நடந்திருக்க, சென்றமாதம் 23ந்தேதி சேலம் காங்காஸ்காரர்கள்செய்த அட்டூழியத்தால் ஒரு திராவிடனுக்கு கால் வெட்டப் பட்டுவிட்டது, ஒரு திராவிடனுக்கு கண் அடிபட்டு நசுங்கி ஒழுகிப்போய் விட்டது. 30, 40 திராவிடர்களுக்கு அடி உதை, குத்து என்பதுடன் 10, 12 பேர்கள் ஆஸ்பத்திரியில் கிடக்கிறார்கள். இதேமாதிரியாக நீடாமங்கலத்திலும் காலித்தனம் நடந்திருக்கிறது. இதன் காரணமென்ன? மற்றும் பல இடங்களில் கண் மூக்கு போய் பெண்களுடன் பலர் அடிபட்டு ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள். இதுவரை சுமார் 10, 15 பேர் திராவிடர்கள் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். இதற்குக் காரணமென்ன? ஆரிய மந்திரி அரியாசனம் ஏறியதால் திராவிடமக்கள் அந்த மந்திரிகளின் கால்கழுவி தீர்த்தம் பருகுவதால் அல்லாமல் வேறு என்ன காரணம்? நம்நாட்டில் நம்மவர்களுக்கு, நம் மக்கள் நலத்திற்குப்பாடுபடும் தொண்டர்களுக்கு இதுதான் கதியா? என்று கேட்கின்றேன். இந்த மந்திரிகள் பதவிக்கு வருமுன் இந்த அட்டூழியம், அயோக்கியத்தனம், காலடித்தனம் இப்படி நடந்ததா என்று கேட்கிறேன்

## செங்கற்பட்டு மாவட்ட திராவிடர் மாநாடு

13, 14-7-46 ஆகிய இருநாட்களிலும் ஷை மாநாடு காஞ்சிபுரத்தில் பழய கோட்டை இளைய பட்டக்காரர் N. அர்ச்சுனன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

திறப்பாளர்:- தோழர் கே. கே. நீலமேகம். கொடியேற்றுபவர்:- தோழியர் சு. பொ. செல்வியார்.

வரவேற்புக்கழகத் தலைவர்:-

தளபதி சி. என். அண்ணாதுரை

மற்றும் பெரியார் ஈ. வெ. ரா., டி. பி. வேதாசலம், வி. சின்னத்தம்பி, C. D. T. அரசு, காஞ்சி கலியாணசுந்தரம், புதுவை பெருமாள், திராவிடமணி, மு. ரத்தினம், என். வி. நடராசன், நெடுஞ்செழியன், அன்பழகன், சனார்த்தனம், சம்பத் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

ஆரியர் பதவிக்கு வந்தார்கள், ஆங்காங்குள்ள ஆரியப் புரோகிதர்கள், மாமாக்கள் அர்ச்சகர்கள் அதிகாரிகள் முதல் ஆணவம்பிடித்து தலைகொழுத்து ஆடுகிறார்கள். மக்களைத் தூண்டிவிட்டு, கன் னெற்றி நம்மீது காலித்தனத்திற்கு ஏவுகிறார்கள். அதிகாரிகள் ஆதரவு இருப்பதாலும் எப்படிப்பட்ட அக்கிரமம், அட்டூழியம், கொலை, கொள்ளை, நாசவேலை, சித்திரவதை செய்தாலும் கேட்கப்பட மாட்டார்கள் என்றும், கேட்கப்பட்டாலும் நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என்றும், நடவடிக்கை எடுத்தாலும் மந்திரிகள் சிபார்சால் தண்டிக்கப்பட மாட்டார்கள் என்றும், தண்டிக்கப் பட்டாலும் மந்திரிகளால் விடுதலை செய்யப்படுவார்களென்றும், விடுதலை மாத்திரமல்லாமல் வாத்தியம், மாலை, ஊர்வலத்துடன் வரவேற்கப்படுவார்கள் என்றும், காலிகளுக்கும் குழப்பக்காரர்களுக்கும், கூலிகளுக்கும் தைரியம் கொடுக்கப்பட்டு காரியத்திலும் காட்டப்பட்டு இருப்பதாலும் அறியாத திராவிட மக்கள் வெறியர்கள் போல் நடத்தப்பட்டுவிடுகிறார்கள்.

## ஆரியப்பேய்!

தோழர்களே நமக்கு இது பாதுகாப்பு மிக மிகக் குறைவுதான். கேள்வி இல்லை, கேட்பாரும்இல்லை. ஆரியப்பேய் இன்று தலைவிரித்து ஆடுகிறது. திராவிட மண்டுகள் பல அதற்கு உடுக்கை அடிக்கின்றன. இந்த நிலையில் அன்னியர் ஒழிய வேண்டும். அயர்கள் ஆதிக்கம் அழிய வேண்டும், என்கின்ற பிரசினையில் எங்களுக்கு முழு அனுதாபம் உண்டு. தொழிலாளர் தோழர்களே நீங்கள் செய்யும் சமாதானமான கிளர்ச்சிக்கு எங்களால் கூடிய எல்லா ஆதரவும் தருகிறோம்.

நீங்கள் திராவிடர்கள்; நாங்கள் திராவிடர்கள். நம்மை இழிவுபடுத்தி, கொடுமைப்படுத்தி, துன்பப்படுத்தி நடத்துகிறவர்கள் ஆரியர்கள். இதை நீங்கள் உணர்ந்துவிட்டால் நமக்கு இந்த கஷ்டம் இருக்காது. ஆகவே தொழிலாளத்தோழர்களே! இதுவரை நடந்தது, நடந்துபோனது போகட்டும். இனியாவது திராவிடர்கள் யாவரும் கட்டுப்பாடாய் ஆரியர்கள் போல் ஒற்றுமையாய் ஒருமனப்பட்ட லட்சியமாய் நடந்துகொள்ளுங்கள். நீங்கள் தொழிலாளிகள் என்றாலும் நாங்கள் உங்கள் தொண்டர்கள். உங்களுக்காகவே உயிர்வாழ்பவர்கள் இதை உணருங்கள். சமாதானமாக பலாத்காரமில்லாமல் நடந்துகொள்ளுங்கள்.

---

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Catchery street, ERODE.